ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீ மதுரகவி ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி அருளிச்செய்த

# வேதாந்ததேசிகன் அடைக்கலப்பத்து

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# வேதாந்ததேசிகன் அடைக்கலப்பத்து

## காப்பு

உடைக்கலமாம் எங்கள் உயர் தேசிகன் மேல் ⋆
அடைக்கலப் பத்தோத அருளும் ⋆ - படைக்கலம் ஐந் -
தேந்தும் பரமன் எழில் குருகை வாழ் மாறன் ⋆
சேர்ந்தமலர்த் தாள் இரண்டும் சேர்ந்து

## நூல்

‡ எழுத்தாதி விண்ணவர்க் கெட்டாப் பரமன் இணையடியை ⋆
வழுத்தார்வம் கொண்டருள் வேதாந்த தேசிக ! மண்ணிடைப் ⋆
பழுத்தாரு ஞானவரோ தயனே ! அருள் பாலித்தெனை ⋆
அழுத்தா தனலிடைக் காப்பாய் உன் தாளுக்கடைக்கலமே ॥ **1** ॥

மண்ணாசையொடு மதியாத காதல் மயக்க ⋆ மிகும்
பெண்ணாசை கொண்டு திரிகுவனோ பெரும் தேவரொடும் ⋆
எண்ணாசை போற்றரும் வேதாந்த தேசிகன் என்றறையும் ⋆
அண்ணா கருணைக் கடலே உன் தாளுக்கடைக்கலமே ॥ **2** ॥

மாதாவும் பெற்றருள் தந்தையும் யாவு மதியொடருள் ⋆
தாதாவும் செல்வத் தனையரு மற்றத் தனமும் எல்லாம் ⋆
நீதான் எனக்கொண்டு வேதாந்த தேசிக ! நின் புகழே ⋆
ஆதாரமாக அடைந்தேன் உன் தாளுக்கடைக்கலமே ॥ **3** ॥

prapatti kidambi sunder kidambi sunder kidambi.com

செண்டார் முலைத் திருவாழ் மார்பன் வேங்கடச் செல்வன் அருள் ⋆
கண்டாவதார மெய்க் கற்பகமே ! இந்தக் காசினிமேல் ⋆
பண்டாய தீவினை பற்றற்று மாய்த் தறு பாவம் எல்லாம் ⋆
அண்டாது கார்த்தருள் செய்வாய் உன் தாளுக்கடைக்கலமே ॥ **4** ॥

புத்தோடு பேய்மதப் பூண்டறுத்தே அறம் பொங்கியெழச் ⋆
சத்துவ மாந்தர் தலை எடுத்தேறவித் தாரணி மேன் ⋆
மெய்த் திருநாதன் சமையம் என்றேத்தும் விளக்கொளியீ ⋆
அத்த நல் தூப்புல் வருவாய் உன் தாளுக்கடைக்கலமே ॥ **5** ॥

எல்லா விதத்திலும் அறிந்தார் இவரென வேழுலகும் ⋆
சொல்லார வேத்தித் தொழுமாறு தோன்றிய தோன்றலெனும் ⋆
வல்லாய் ! கவிச்சிங்கமானவனே ! செயவாக் கருணீ ⋆
அல்லாதெவர் துணை அய்யா ! உன் தாளுக்கடைக்கலமே ॥ **6** ॥

தம்பத் துகிரிட்டு நீர் மாற்றி ஆண்டி சரண் புகுமாறு ⋆
உம்பர்க் கரிய பன்னாகம் தன் தாயுனை ஒப்பவரார் ⋆
வம்புற்ற பூம்பொழில் சூழ் தூப்புன் மேவிய மாணிக்கமே ⋆
அன்புற்ற வண்மைக் குணத்தாய் உன் தாளுக்கடைக்கலமே ॥ **7** ॥

எல்லாம் பரனிலை ஒப்பவர் என்று மிகத்தினிடை ⋆
நல்லார் எவரும் அவர்நிலை நண்ணுதல் ஞாயம் என்றும் ⋆
சொல்லார் சுருதி அருள் தூப்புன் மேவிய தூயநெறி ⋆
அல்லார் தமக்கிருள் அல்லாகு வாய் உன் அடைக்கலமே ॥ **8** ॥

முடிச்சோதியும் பொன் முகச்சோதியும் அருண் மூரன்மணி ⋆
அடிச்சோதியும் கண் மலர்ச்சோதியும் அநுமானிகரும் ⋆
திடச்சோதியும் கவித் தேன் சோதியும் எங்கள் தேசிகனின் ⋆
அடிச்சோதியும் எந்த நாளறிவேன் உன் அடைக்கலமே ॥ **9** ॥

‡ செய்யாட்குகந்த திருமார்பன் வேங்கடச் சீர்வரையான்⋆
மையாரும் கண்டன் மலரயன் ஏத்தி வணங்கு⋆ வளைக்
கையானருளில் கனிந்துயர் தூப்புல் கதிரனைய
ஐயா⋆ சரணம் அடைந்தேன் தாளுக்கடைக்கலமே ॥ **10** ॥

சீராரும் வைணவர்கள் சிறக்க வந்தோன் வாழியே⋆
திருமாலின் சமய நிறந்திருந்தி வந்தோன் வாழியே⋆
ஏராரும் உடையவருக்கின்ப முற்றோன் வாழியே⋆
எழில் அரங்கன் பதமுளத்தில் இருத்தினான் வாழியே⋆
தாராரும் திருவோணம் தனில் உதித்தோன் வாழியே⋆
தனித் தூப்புல் எனுநகரம் தழைக்க வந்தோன் வாழியே⋆
தேராரும் வேதாந்தம் சிறப்பித்தோன் வாழியே⋆
தேசிகனார் இணையடிகள் தினந்தினமும் வாழியே ॥ **11** ॥

**வேதாந்ததேசிகன் அடைக்கலப்பத்து முற்றிற்று**

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்

sunder kidambi prapatti.com sunder kidambi